# யாக்கோபு

**முன்னுரை:**

யாக்கோபு எழுதிய நிருபம் அதை எழுதிய யாக்கோபுவின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. இந்த யாக்கோபு தம்மை தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு என குறிப்பிடுகிறார்.

மொத்தமாக வேதாகமத்தில் நான்கு யாக்கோபுகள் இருக்கிறார்கள். பழைய ஏறப்பாட்டில் உள்ள யாக்கோபு ஏசாவின் சகோதரன் (ஆதி 25:25,26). புதிய ஏற்பாட்டில் மூன்று யாக்கோபுகள் உள்ளனர். அதில் இரண்டு யாக்கோபுகள் அப்போஸ்தலராகவும் (மத் 10:2-5; அப் 1:13), இயேசுவின் சகோதரர்களில் ஒரு யாக்கோபும் இருக்கிறார்கள் (மத் 13:54-55), புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட இந்த மூன்று யாக்கோபுவில் யார் இந்த நிருபத்தை எழுதியது யார்? என கூறுவது சிரமமாக இருக்கிறது.

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு இந்த நிருபத்தை எழுதியிருக்கலாம் என அதிகமாக கருதப்படுகிறது. (யாக் 1:1) இதற்கு இந்த எழுத்தாளர் தன்னை அப்போஸ்தலன் என குறிப்பிடாதது முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. இயேசுவின் சகோதரன் யாக்கோபு அப்போஸ்தலன் இல்லை.

**இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபுவின் வாழ்க்கை:**

யாக்கோபு இயேசுவின் நான்கு சகோதரர்களில் ஒருவராக இருந்தார். யாக்கோபு, யோசே, சீமோன், யூதா (மத் 13:54-56), இந்த நான்கு பேர்களும் யோசேப்புக்கும், மரியாளுக்கும் மாம்சத்தினாலே பிறந்தவர்கள்.

இவைகளை பார்க்கும் போது ஆரம்பத்தில் இயேசுவை நம்பாத யாக்கோபு இயேசுவின் உயிர்தெழுதலுக்கு பிறகு உண்மையாய் ஊழியம் செயத்தோடு, சபையில் மிக முக்கியமான பொறுப்பை உடையவராக இருந்திருக்கிறார் என்பதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

## இந்த நிருபத்தின் நோக்கம்

இந்த நிருபத்தின் நோக்கம் கிறிஸ்தவர்கள் தங்களுடைய தேவபக்தியையும், விசுவாசத்தையும், தங்களுடைய ஞானத்தையும் தங்கள் நடைகையின் மூலமாய் காண்பிக்க வேண்டும்.(1:21;2:18; 3:13)

இந்த நிருபம் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த மக்களுக்கு எழுதப்பட்டுள்ளது (1:1,12), உபத்திரவப்படும் நிலைமையிலும் உண்மையான பக்தி மற்றும் விசுவாசமுடையவராய் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க வேண்டும் என கூறப்படுகிறது. (யாக் 5:8,9). இது அதிகமாக கிறிஸ்தவ வாழ்க்கையின் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

## அதிகார சுருக்கம்

**அதிகாரம் ஒன்று:**

1. கிறிஸ்தவர்கள் சோதனையில் அகப்படும் போது என்னவெல்லாம் செய்ய வேண்டும்? (1:1-21)
2. நாம் நம்மை ஏமாற்றிக்கொள்ளாமல் சுயாதீனப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து அதின் படி நடக்க வேண்டும் (1:22-27)

**அதிகாரம் இரண்டு:**

1. கிறிஸ்தவர்கள் பட்சப்பாதத்தோடே சகோதரருக்குள் நடக்க கூடாது (2:1-13)
2. கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை கிரியைகள் மூலமாய் காண்பிக்க வேண்டும் (2:14-26)

**அதிகாரம் மூன்று:**

1. கிறிஸ்தவர்கள் தங்களுடைய நாவின் மீது அதிகம் கவனம் செலுத்த வேண்டும் (3:1-12)
2. கிறிஸ்தவர்கள் தங்கள் கிரியைகளை நல்ல நடக்கையினால் காண்பிக்க வேண்டும் (3:13-18)

**அதிகாரம் நான்கு:**

1. கிறிஸ்தவர்கள் உலகத்தை சிநேகிக்க கூடாது, இச்சிக்க கூடாது (4:1-5)
2. கிறிஸ்தவர்கள் தேவனுக்கு முன்பு தாழ்மையாயிருக்க வேண்டும் (4:6-12)
3. கிறிஸ்தவர்கள் நாளை தினத்தை குறித்து எப்படி யோசிக்க வேண்டும் (4:13-17)

**அதிகாரம் ஐந்து:**

1. ஐசுவரியவான்கள் மேல் வரும் ஆக்கினையும் அதற்கான காரணமும் (5:1-6)
2. கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவுக்காக பொறுமையாயிருக்க வேண்டும் (5:7-12)
3. கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாயிருக்கும் போதும், துன்பப்படும் போதும் என்ன செய்ய வேண்டும் (5:13-18)
4. ஒரு சகோதரர் விசுவாசத்தை விட்டு விலகும் போது கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் (5:19-20)

## நடை முறை கிறிஸ்தவம்

இந்த நிருபமானது **“சிதறியிருக்கிற” (1:1)** என தொடங்குவதால் இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டுள்ளது என்பதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. அப் 8:1-4 யில் கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தினால் சிதறிப்போனார் என்றும், இப்படி சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனங்களை பிரசிங்கித்தார்கள் என வாசிக்கிறோம். இப்படிப்பட்ட

சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நடத்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்த நிருபம் மையப்படுத்துகிறது.

இந்த நிருபம் நமக்கு போதிக்கும் செய்தி நம்முடைய வாழ்க்கையில் நாம் சோதனையிலும், உபத்திரவத்திலும், நாம் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாய் வாழ்த்து இயேசுவுக்கா பொறுமையாய் காத்திருத்து இருந்து. நம்முடைய வெற்றியின் கிரீடத்தை இயேசுவிடம் இருந்து பெற்றக்கொள்ள வேண்டும் என்பதை நமக்கு போதிக்கிறதாக இருக்கிறது .

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று **விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.**" – யாக் 1:12

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய **கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்**". – 2 தீமோ 4:7,8

முதலில் இயேசுவை மேசியா என அவரது சகோதரர்கள் விசுவாசிக்கவில்லை (யோவா 7:4,5); ஆனால் இயேசுவின் உயிர்தெழுதலுக்கு பிறகு இயேசு யாக்கோபுக்கு தரிசனமானர் (1 கொரி 15:7), இதன் பின்பு இயேசுவின் சகோதரர்கள், மரியாள் எல்லாரும் எருசலேமில் அப்போஸ்தலரோடும் சீஷர்களோடோம் இருந்தார்கள் (அப் 1:14).

இந்த யாக்கோபு ஒரு அப்போஸ்தலனாயிருந்ததில்லை, அப் 1:21,22 - யல் தரப்பட்டுள்ள அப்போஸ்தலருக்கான தகுயாம்சங்கள் இவரிடத்தில் காணப்படாததால் அப்போஸ்தலராவதற்குத் தகுதியற்றவராயிருந்தார். ஆனாலும் தன்னுடைய கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையாக ஊழியம் செய்ய கூடியவராக இருந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தாம் மனமாற்றம் அடைந்து மூன்று வருடங்களுக்குப் பிறகு எருசலேமில் யாக்கோபுடன் நேரத்தை செலவிட்டார் (கலா 1:17-19). இந்த இடத்தில் பவுல் யாக்கோபுயை கரத்தருடைய சோகதரன் என கூறுகிறார். இந்த யாக்கோபு சபையில் தூண்களில் ஒருவராக எண்ணப்பட்டார். (கலா 2:9)

விருத்தசேதனம் பற்றிய விவாதம் ஒன்று எழுந்த போது **"அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்."** அப் 15:2 அந்த படி இந்த விவாதம் எருசலேமில் நடந்துக்கொண்டிருக்கும் போது யாக்கோபின் உரையும். இவ்விஷயத்தில் அவரது வழி நடத்துதலும் யாக்கோபுவின் தலைமைத்துவ திறமைகளை தெளிவாக்குகின்றது (13-21). யாக்கோபு மூப்பராய் இருந்தார் (அப்21:18)